அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப்
பைகளைக் கொடுத்து
இனாம்
பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கப் விலை 50/-
நான்கு மாதக்
குழந்தைகளிலிருந்து
கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 11 ஞாயிற்றுக்கிழமை (25 06 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 210

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க

ஜூலை 15க்கு முன்னர் அரசமைப்பு திருத்தம்

இல்லையெனில் ஜே.வி.பி. எதிர்ப்பு இயக்கம்

அரசுக்கு கடிதமூலம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதி தேர்தலின் போது சந்திரிகா வாக்குறுதி அளித்தது போல, எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான புதிய அரசமைப்பைக் கொண்டு வராவிடில் --

அரசாங்கத்துக்கு எதிரான இயக்கத்தை -- நடவடிக்கைகளை-- மேற்கொள்ளப் போவதாக ஜே வி. பி. [மக்கள் விடுதலை முன்னணி] எச்சரிக்கை செய்துள்ளது.

இது சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணி கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து விடுவதென்ற தனது தேர்தல் உறுதிமொழியை பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான அரசமைப்புச் சீர்திருத்தங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது தனிநபரோ அதனை ஆட்சேபிக்கப் போவதில்லை.

ஜனநாயகத்தை மதிக்கும் எவரும் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்க்கமாட்டார்கள்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு அரசாங்கம் தவறினால் நாம் சில எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்போம்.

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு அமைவாகவே எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் அமையும் — என்று உள்ளது. [அ-4]

தாக்குதல் ஹெலிகளை வாங்குவதில் அரசு நாட்டம்

கொழும்பு, ஜூன் 25

வடபகுதியில் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா விமானப் படைக்கு தாக்குதல் ஹெலிகளை (HELICOPTER GUN SHIPS) கொள்வனவு செய்வதென அரச உயர்மட்டம் தீர்மானித்துள்ளதாக ''திவயின'' பத்திரிகை தெரிவிக்கிறது.

புலிகளை அழிப்பதற்கு எம். ஐ 17 ரகத்தைச் சேர்ந்த ''பறக்கும் டாங்கி'' என அழைக்கப்படும் ஹெலிகள் தேவையென பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கருதுகிறார்கள்.

தற்போது ஸ்ரீலங்கா விமானப்படையிடம் தாக்குதல் ஹெலிகள் சிலவே உள்ளனவாம்.

''பறக்கும் டாங்கி'' என அழைக்கப்படும் ஹெலிகளைப் பயன்படுத்தியே சாவகச்சேரி, கிளிநொச்சிப் பகுதிகளில் அமைந்திருந்த புலிகளின் முகாம்கள் பலவற்றை இந்திய அமைதிகாக்கும் படையினர் இலகுவாக அழித்தனர் என்றும் —

மிகவும் பதிவாகப் பறக்கக் கூடியதும் விமான எதிர்ப்பு

[4 ஆம் பக்கம் பார்க்க]

தூதரகங்களுக்கு பலத்த பாதுகாப்பு

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு உட்பட கொழும்பில் இடம் பெற்ற ஏனைய குண்டு வெடிப்புகளை அடுத்து கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள வெளி

[4ஆம் பக்கம் பார்க்க]

ஒரு தமிழருக்காவது தூதுவர் பதவி இல்லை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் வெளிநாடுகளுக்கு பன்னிரண்டு புதிய தூதர்களை நியமித்துள்ளது. ஆனால் அவற்றில் ஒருவர் கூட தமிழர்கள் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சராக — தமிழரான — லக்ஷ்மன் கதிர்காமர் பதவியேற்ற பின்னர் —

சவுதிஅரேபியா, ரஷ்யா, ஐக்கியஅரபு ராஜ்ஜியம் ஆகியவற்றுக்கு மூன்று முஸ்லிம்களும் —

பிரான்ஸ், இத்தாலி, கொரியா, மலேசியா, புதுடில்லி சென்னை, இந்தோனேஷியா, லண்டன், ஐ.நா.சபை ஆகிய இடங்களுக்கு சிங்களவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சிக் கடலில் கடற்படையினர் தாக்கு

மீனவர் ஒருவர் காயம்

வல்வெட்டித்துறை, ஜூன் 25

வடமராட்சிக் கடலில் கடற்படையினர் நேற்று நடத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் படுகாயம் அடைந்தார். அவரின் படகும் சேதம் அடைந்தது.

சுப்பர் மடத்தைச் சேர்ந்த அலெஸ் றொபேட் வின்சென்ட் (வயது 30) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

இவருடன் படகில் கூடச் சென்ற செல்லக்கதிரமலை அபிமன்யூ (தவம்) என்பவரின் உதவியினால் காயம் அடைந்தவர் பாதுகாப்பாக கரை சேர்க்கப்பட்டு பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து 'டோரா,' படகுகளில் வந்த படையினர் நேற்றுக் காலை தொண்டமானாறு, மயிலியதனை, ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை பொலிகண்டி, சக்கோட்டை, திக்கம் பகுதிகளை நோக்கி கவிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சக்கோட்டையில் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே மேற்கண்டமீனவர் காயமடைந்தார். (இ-155)

முச்சந்திமுரளி



அப்ப... உவர் அஷ்ரப் திரிசங்கு சொர்க்கம் படைக்கிறார் போலை......!

புலிகள் தாக்குதல் ஆரம்பிக்க முன் முந்திக் கொள்ள படையினர் முயற்சி

வடக்கில் யுத்தப் புயல் என்கிறது கொழும்பு வார இதழ்

கொழும்பு, ஜூன் 25

வடக்கில் புலிகள் தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் தாம் முந்திக்கொள்ளும் அவசியம் படைத்தரப்புக்கு எழுந்துள்ளது. எனவே வடக்கில் யுத்தப் புயல் மையம் கொள்ளத் தொடங்கியிருப்பது தெரிகிறது.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக வெளியான கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்கள் வருமாறு:-

மழை காலத்துக்கு முன்னர் வடக்கில் உள்ள முகாம்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதுடன் குறைந்தபட்சம் முகாம்களின் பரப்பளவை விஸ்தரிக்கவும் படைத்தரப்பு முயலவேண்டி உள்ளது.

வடக்கில் படையினரின் நடவடிக்கைகளில் இரு கட்டங்கள் இருக்கின்றன.

முதற் கட்டம் தற்காப்பு யுத்தம். தற்காப்பு யுத்தத்தில் முகாம்களைப் பாதுகாப்பது, முகாம்களில் இருந்து குறிப்பிட்ட தூரம் முன்னேறிச் சென்று தாக்கிவிட்டுத் திரும்புவது என்பன அடங்கும்.

இரண்டாவது கட்டம் புலிகளிடம் உள்ள பகுதிகளை விடுவித்து அங்கு நிலைகொள்வது.

வவுனியாவில் இருந்து குறிப்பிட்ட தூரம் முன்னேறி விடுதலைப் புலிகளின் பலத்தை நாடி பிடித்துப் பார்த்துவிட்டு தொடர்ந்து கிளிநொச்சி வரை முன்னேறுவது என்று படையினர் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் ஒன்று கூறுகிறது.

ஆனையிறவு, கிளிநொச்சி, பூநகரி ஆகிய பகுதிகளில் ஓர் இராணுவ வலைப்பின்னலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

புலிகளின் விமானப் படைக்கு மேலும் விமானப் பாகங்கள் வந்துள்ளனவாம்

கொழும்பு, ஜூன் 25

மேலும் மூன்று விமானங்களுக்குத் தேவையான பாகங்களும் ரேடார் கருவி உட்பட பல்வேறு உபகரணங்களும் அண்மையில் புலிகளுக்கு வந்து சேர்ந்துள்ளனவென பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக ''திவயின'' பத்திரிகை தெரிவிக்கிறது.

தற்போது வந்துள்ள விமானப் பாகங்களை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவெனவும் —

இப்பாகங்களை இணைக்கும் வேலைகள் முடிவடைந்ததும் புலிகளிடமுள்ள விமானங்களின் எண்ணிக்கை ஆறாக உயரும் என்றும் —

இதனால் புலிகளின் விமானப் படையின் ஆற்றல் அதிகரிப்பதுடன் அவர்களுக்கு சாதகமான நிலை உருவாகலாம் எனவும் அட்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் விமானப்படைக்காக கடலில் தரையிறங்கக் கூடிய சிறிய ரக விமானங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் —

தரையிலும் கடலிலும் புலிகள் பெற்றுள்ள ஆற்றலைப் போல வானிலும் பெறுவதே அவர்களின் நோக்கம் எனவும் —

புலிகளால் பாதுகாப்புப் படைகள் மீது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க]

வாகரையில்

கிறிஸ்தவ மதகுரு சுடப்பட்டார்

கொழும்பு, ஜூன் 25

மட்டக்களப்பு வாகரையில் வண. பிதா ஜேசுதாஸன் என்பவர் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர் ஒருவரினால் சுடப்பட்டார்.

இவர் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும்—

பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் தெரிவிக்கிறது. (இ-4)

கொழும்பு - கல்முனை:

பஸ்ஸை கடத்திச் சென்று பயணிகளிடம் கொள்ளை

கொழும்பு, ஜூன் 25

கொழும்பிலிருந்துகல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த —கல்முனை டிப்போவுக்குச் சொந்தமான— பஸ் ஒன்று அதில் பயணம் செய்த நான்கு அல்லதுஐந்தபேரைக் கொண்ட குழு ஒன்றினால் காட்டுக்குள் கடத்திச் செல்லப்பட்டு கொள்ளையடிக்கப் பட்டது.

கடந்த புதன் இரவு பத்து மணியளவில் காட்டுப் பகுதியூடான வீதியில் சென்று கொண்டிருக்கையிலேயே பஸ் வீதியிலிருந்து காட்டுக்குள் கடத்தப்பட்டது. பயணிகள் தாக்கப்பட்டு பணம், நகை என்பன கொள்ளையிடப்பட்டன. [உ]

★ ராணுவம் - கடற்படை இணைந்து

கல்குடா வாடி வீட்டில் புதிதாக முகாம் அமைப்பு!

கொழும்பு, ஜூன் 25

வாழைச்சேனை கல்குடா வாடிவீடு கட்டடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் படையினர் முகாமிட்டுள்ளனர்.

இராணுவத்தினரும், கடற்படையினரும் கூட்டாக அங்கு தங்கியுள்ளனர்.

கல்குடா கடற்கரைப்பகுதியிலே இக்கட்டடம் அமைந்துள்ளது. கடல் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவே இம் முகாம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வாடிவீடு கட்டடத்துக்கு அருகில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகமும் அமைந்துள்ளது. (ஐ)

அஷ்ரப் ஏற்பாடு:

கிழக்கிலே புதிதாக மற்றொரு பல்கலைக்கழகம் நிறுவ அரசுமுடிவு

அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் அமையும்

கொழும்பு, ஜூன் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலையில் அமைந்திருக்கும் கிழக்குப் பல்கலைக் கழகத்துக்குப் புறம்பாக கிழக்கில் இன்னொரு பல்கலைக்கழகத்தை அமைக்க அரசு தீர்மானித்திருக்கிறது.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்ற பெயரில் — தமிழர்கள்,முஸ்லிம்கள்,சிங்களவர்கள் ஆகிய மூன்று இன மக்களும் கல்வி கற்பதற்கு ஏதுவாக — அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் பகுதியில் இது அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னோடியாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக் கட்டடத்தில் ஓரிரு வாரங்களில் பல்கலைக்கழக கல்லூரி ஒன்று அமைக்கப்படவிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் அண்மையில் தெரிவித்தார்.

ஒலுவிலில் புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படும் வரை புதிய பல்கலைக்கழகக் கல்லூரி அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலேயே இயங்கும் என்றும்—

இதுவே,இறுதியில் பூரணத்

(3 ஆம் பக்கம் பார்க்க]

வடக்கு - கிழக்கு சிவில் நிர்வாகத்தில் இடைக்கால சபைக்கு முக்கியபங்கு

அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 25

வடக்கு - கிழக்கின் சிவில் நிர்வாகத்தில் இடைக்கால நிர்வாக சபைக்கு [illegible] பங்கு இருக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் [illegible] கள் சிவில் நிர்வாகத்தின் முக்கிய பங்கேற்க வழி ஏற்படும்.

வெளிநாட்டு செய்தியாளர் [illegible] துறையின் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் [illegible] கூறினார்.

அரசிய தீர்வு காணும் அரசின் முயற்சியில் இது ஒரு பங்காக மட்டுமே இருக்கும் என்றும்—

இடைக்கால நிர்வாகசபை [illegible]பான விவரங்களை தாம் விரைவாக தயாரிக்க [illegible]ளதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

படையினருக்கு உதவ 'வெண்தாமரை' திட்டம்

விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் ஆயுதப்போரில் காயமடையும் படையினரின் மருத்துவ சிகிச்சைக்காக இலங்கை அரசு வெண்தாமரை [White Lotus] என்னும் பெயரில் புதிய நிதியம் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இராணுவச் செலவுகளை சமாளிப்பதற்காக பாதுகாப்பு வரியையும் 3.5 சதத்திலிருந்து 4 5 சதமாக அரசு உயர்த்தி உள்ளது. [இ-4-6]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இல. 20, சென் பீற்றர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதியில் (அடைக்கல மாதா கோயிலுக்கு சமீபமாக) சகல வசதிகளையும் கொண்ட இரண்டு பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு சனி, ஞாயிறு தினங்களில் நேரில் பார்வையிடலாம். [சி-1554]

புதுவீதி கொய்யாத்தோட்டம் பாஷையூரில் வீட்டுடன் 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. சவிரியாம்பிள்ளை, இல. 7, விதானையார் வீதி, ஈச்சமோட்டை. (8601)

3 H. P. கொம்பிரசருடன் கூடிய ஐஸ்பழம் தயாரிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: 16, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (37227)

கடைக்குரிய கண்ணாடி அலுமாரி 9 அடி நீளம் 7½ அடி உயரம் இரண்டு செற் விற்பனைக்கு உண்டு. கிழமை நாட்களில் 2-00 மணி முதல் பார்வையிடலாம். க. குலசிங்கம், இல: 161, சிவன் பண்ணை வீதி, கொட்டடி யாழ்ப்பாணம். [37188]

நல்லின இறைச்சி சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன் மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி, உடுவில். (8447)

கடந்த கால A/L கணித விஞ்ஞான வினா-விடைப் புத்தகங்களும், முன்னோடி மாதிரி வினாத்தாள்களும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு "A" Level Centre, Ist Lane Pointpedro Road, Jaffna. (சி-1711)

தேவை

ஆங்கில வைத்தியசாலைக்கு பயிலுநர் தாதிமார் தேவை. முழுவிபரத்துடன் விண்ணப்பிக்கவும். மேற்பார்த்து இல. 972, உதயன், யாழ்ப்பாணம். [8603]

அன்ட்றீஸ் நிறுவனத்திற்கு 100 K.V.A. டைனமோ எஞ்சினுடன் தேவை. தனிய டைனமோ விற்பனைக்கு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். அன்ட்றீஸ் நிறுவனம், கண்டி வீதி, நாவற்குழி. [37226]

மணப்பெண்கள் தேவை

சுவிஸிலுள்ள 30 வயது, கனடாவால் வந்த 34 வயது மணமகனுக்கும் 33, 35 வயது M. B. Bsக்கும், 3½ அடி உயரமான 36 வயது இலிகிதருக்கும், 34 வயது விரிவுரையாளருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [37206]

மணமகன் தேவை

வயது 31, நட்சத்திரம் மகம், செவ்வாய்க்குற்றமற்ற ஆசிரியைக்கு அரச பதவி வகிக்கும் மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 805, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37176]

திருமண சேவை

செவ்வாய் தோஷமுள்ள பாவங்கள் கூடிய ஆசிரியருக்கும், அரச உயர் பதவி வகிக்கின்றவருக்கும் மணப்பெண்கள் தேவை. தொடர்பு கடிதமூலம் / நேரில் சுவாமியார், 53/5, அன்ன சத்திர ஒழுங்கை, சந்தர்மடம். [37212]

விசேஷ அன்ரனா

ரூபவாஹினி மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வினஸ் டில்லா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1489]

புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் தேர்வுக்கான வினாப்பத்திரம் 1, வினாப்பத்திரம் 2க்குரிய பொதுவிவேகம், பொதறிவு வெளிவந்து விட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [37173]

மிருதங்கம்

ஒரு வெறும் கொட்டு தந்து முழுவேலையும்செய்ய 1000/- மட்டும். விலையில் மாற்றமில்லை. நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் யாவரும் செய்து பெற்றுக்கொள்ளலாம். கோவிந்தபிள்ளை விஜயகுமார், இல. 192/1, நாலவர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (37191)

கணித வகுப்புக்கள்

கணித வகுப்புக்கள் ஆண்டு 9, 10, 11 ஒவ்வொரு பிரிவிலும் 5 பேர் மட்டும் தனித்தனி கவனம் எடுக்கப்படும். திரு. ச. சுதாகரன், (பயிற்சி பெற்ற கணித ஆசிரியர்) 34/7 செட்டித்தெரு, நல்லூர். (37222)

O/L கணிதம் - 95

விசேடமாக Distinction Credit பெறுபேறடைய வினா-விடை மூலம் ஆரம்பத்திலிருந்து B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும் இல. 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி), திருநெல்வேலி. (37218)

சனி மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. 7-7-95 முதல் சனி வக்கிரம் 9 8-95 இல் மீண்டும் சனி [வக்கிர] மாற்றம் நூலாசிரியர்: சதீபா (இடிகுண்டருகே) கட்டுடை. ஜாதகக் கணிப்புகளுக்கும், விவாகப் பொருத்தங்களுக்கும் பார்வையிட நூலாசிரியரை நேரில் சந்திக்கலாம். [8444]

UNIVERSITY OF JAFFNA

TENDER NOTICE

Sealed tenders are invited from contractors registered for civil Engineering works with ICTAD for the "Painting 75,000 gallons elevated water tank".

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna until 28-06-1995 on producing a receipt from Bursar, University of Jaffna for the following tender fee.

1. Refundable — Rs. 1000/-
2. Non-refundable — Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a. m. on 11 - 07 - 1995

Tender forms can be inspected free of charge at Maintenance Branch, University of Jaffna during office hours.

– Registrar.

University of Jaffna.
P. O. Box 57,
Jaffna.

[C-1531]

---

90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் கந்தசாமி முருகவேள்

(ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர் ஆறுமுகம் கந்தசாமியின் மகன்)

மலர்வு: 06 - 04 - 1964

குவிவு: 28 - 03 - 1995

ஆறாத துயரம் மாறாது மனநிலை
ஏறாத எவர் சொன்னாலும் கூறாது போயினையோ!
எங்கள் குலக் கொழுந்தே! அன்பு மகனே!
நங்கள் செல்வச் செல்வமே! உன் அன்புச் சோதர சோதரிகள்
கதறி அழுகிறார்கள், கனவிலுமோ மறவாது உன் மருமக்கள்
குமுறி சீ மாமா! சீ மாமா! என்றே சிந்துகிறார்கள் கண்ணீரடா!
சித்தப்பா! சித்தப்பா என்றே தினமும் ஏங்குகிறார்கள் உன்
மூத்தண்ணா பெற்ற செல்வங்கள் தானும்.

எங்கள் அருமை மகனின் அகால மறைவு கேட்டு விரைந்து தேற்றம் கூறி ஆறுதல் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் நன்றியையும் அன்பையும் தெரிவிப்பதோடு இன்று 25 - 06 - 95 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்தி வைபவங்களிலும் பங்குகொண்டு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

ஐயா, அம்மா, சகோதர
சகோதரிகள், மைத்துனர்,
பெறாமக்கள், மருமக்கள்.

221/2, விநாயக முதலியார் வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(37163)

உ

கோண்டாவில் கிழக்கு
ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

மஹோற்சவம்

25 - 06 - 1995 — 06 - 07 - 1995

25 — 06 — 1995	ஞாயிறு பகல் 11-00 மணி — கொடியேற்றம்
30 — 06 — 1995	வெள்ளி மாலை 5-30 மணி — பூச்சப்பறம்
01 — 07 — 1995	சனி இரவு 7-00 மணி — கைலாயவாகனம்
02 — 07 — 1995	ஞாயிறு இரவு 7-00 மணி — சப்பறம்
03 — 07 — 1995	திங்கள் காலை 9-30 மணி — இரதோற்சவம்
04 — 07 — 1995	செவ்வாய் காலை 9-30 மணி — தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்)
05 - 07 — 1995	புதன் மாலை 4-00 மணி — திருக்கல்யாணம் உற்சவம் (முருகப் பெருமான்)
06 — 07 — 1995	வியாழன் மாலை 5-30 மணி — வைரவர் உற்சவம்

மஹோற்சவக் குரு:
பிரதிஷ்டாமணி, வேதாகமகிரியாஜோதி,
ஆகம கிரியாதிலகம்
பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக் குருக்கள்

- ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் கிழக்கு.

விளம்பர அன்பளிப்பு:

HARY'S INSTITUTE

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

[37208]

3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மாசிலாமணி தேவநேரு

(முன்னாள் கிராமசேவை உத்தியோகத்தர், தாவடி)

தோற்றம்: 18 — 06 — 1949

மறைவு: 28 — 06 — 1992

திதி: 25 - 06 - 1995

மூன்றாண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு நீங்கவில்லை உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டி நிற்கும்.

மனைவி, மக்கள்,
தாய் சகோதரர், மாமன்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(37213)

5-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 28 – 04 – 1949

உதிர்வு: 25 – 06 – 1990

செல்வி நடராசா நாகபூஷணி

(லிகிதர், யாழ். செயலகம்)

நயினை நாகபூஷணியருளால் தரணியில்
வந்துதித்த அம்மையே - உம்மை
தரிசனம் செய்திட ஐந்து ஆண்டு காலம்
உருண்டோடி விட்டாலும் – தீராத பாசத்தால்
நினைந்து நினைந்து வருந்துகின்றோம்
அன்பே உருவான எங்கள் தெய்வமே!
என்றும் எம்மைவிட்டு நீங்கா அகல் விளக்கே!
உன் நினைவில் என்றும் ஏங்கித் தவிக்கின்றோம்
என்றும் எம் மனதில் உன் நினைவே.

அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்.

[illegible]

[37211]

உ

கோண்டாவில் - வடக்கு
அருள்மிகு
ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்களே!

தக்ஷிண கைலாசமென விளங்கும் இவ்விலங்காதீபத்தின் யாழ்ப்பாண நன்னகரின் வடபால் சைவமும், தமிழும் தழைத்தோங்கும் கோண்டாவில் என்னும் திருக்கிராமத்தின் கண்ணே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராய சுவாமிக்கு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் யுவ வருஷம் ஆனித் திங்கள் 11ஆம் நாள் [25-06-95] ஞாயிற்றுக்கிழமை (இன்று) வருடாந்த மஹோற்சவ (கொடியேற்றம்) வைபவம் ஆரம்பமாகி 10 தினங்கள் விசேஷமாக நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதனால், அடியார்கள் யாவரும் ஆசாரசீலர்களாகி விரத நியமங்களுடன் ஆலயத்திற்கு வந்து எம்பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

✶ முக்கிய நிகழ்ச்சிகள் ✶

ஆனி மீ 11ஆம் நாள் (25-06-95) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றம் பகல் 12 மணி
ஆனி மீ 15ஆம் நாள் (29-06-95) வியாழக்கிழமை மஞ்சவாகனத் திருவிழா
ஆனி மீ 18ஆம் நாள் (02-07-95) ஞாயிற்றுக்கிழமை சப்பரத் திருவிழா
ஆனி மீ 19ஆம் நாள் (03-07-95) திங்கட்கிழமை இரதோற்சவம் காலை 10 மணி
ஆனி மீ 20ஆம் நாள் (04-07-95) செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம் காலை 10 மணி கொடியிறக்கம் மாலை 5 மணி
ஆனி மீ 22ஆம் நாள் (06-07-95) வியாழக்கிழமை பூங்காவனம் மாலை 5 மணி (விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும்)
ஆனி மீ 23ஆம் நாள் (07-07-95) வெள்ளிக்கிழமை வைரவர் மடை மாலை 4 மணி

மஹோற்சவ சிவாச்சாரியார்:
கிரியாஜோதி
சிவஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக்குருக்கள்

25 - 06 - 95 — 04 - 07 - 95 வரை தினமும்
இரவு 8-00 மணி தொடக்கம் 9-15 மணி வரை
'சிவத்தமிழ் வித்தகர்' சிவ. மகாலிங்கம் [B. A.]
அவர்கள்
சொற்பொழிவாற்றுவார்கள்
(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி)

இங்ஙனம்:
அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தான
பரிபாலன சபையாரும், ஊர்மக்களும்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

மஹோற்சவ விஞ்ஞாபனம் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

[37225]

கலட்டி
எச்சாட்டி மஹாமாரியம்மன்
தேவஸ்தானம்

கும்பாபிஷேகம் பற்றி ஒரு விண்ணப்பம்

எட்டும் தூரத்தில் அமைந்துள்ள வீரகத்தி விநாயகர் ஆலய ரதோற்சவம் நிகழும் ஆனி 19 ஆம் திகதி (03-07-95) காலைப் பொழுதிலேயே க. எ. ம. அம்மன் தேவஸ்தான கும்பாபிஷேகம் நடைபெறுவது வேதங்களுக்கு ஏற்புடையதல்ல. இது வேதியருக்கு விரோதமானது வழமைக்கு மாறானது; ஆகம விதிகளுக்கு வேறானது. இதை ஈழத்தின் பிரபல சிவாச்சாரியார்களும் நிஷ்காரியம் என்றும் ஆகாதது என்றும் விதந்து கூறியுள்ளார்கள். எனவே ஆலய தர்மத்தைக் கருதி மூலஸ்தப காரியங்களை கறை குறையின்றிச் செய்வது வேதாந்தியர்களதும், கற்றறிந்தோரினதும் கடமையதாகும்' சம்பந்தப்பட்டவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

நன்றி

அடியார்கள் (உரிமையாளர்கள்)
சார்பில்
கே. எம். ஆர். தருமராஜா

(37236)

JAFFNA COLLEGE

FOUNDER'S DAY CELEBRATION

We Cordially invite alumni, Parents & Friends to be Present at the Birth Anniversary Celebration of

Rev. Dr. Daniel Poor
(First Principal, Batticotta Seminary)

to be held on

Tuesday 27th June 1995 at 10-30 a. m.

in

OTTLEY HALL, JAFFNA COLLEGE

Principal

Jaffna College,
Vaddukoddai.

[C-1557]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

வழிப்பறி கொள்ளைகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வழிப்பறிக் கொள்ளைகள், வீடுகளில் திருட்டு என்பன பரவலாக நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இது கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதும், தடுக்கப்பட வேண்டியதும் ஆகும். வழிப்பறிக் கொள்ளையில் பெருந்தொகைப் பணமோ, பெறுமதி மிகுந்த பொருள்களோ கொள்ளையடிக்கப்பட்டதான பெரும் சம்பவம் எதுவும் இடம்பெறவில்லையாயினும் —

போர்க்கால சூழ்நிலையில், கஷ்டங்கள், மலிந்த காலத்தில், பத்து ரூபா பெறுமதியான பொருளை இழப்பது என்பது சராசரி, சாதாரண பொதுமக்களுக்கு பெரும் கொள்ளைக்குள்ளான நிலையையே ஏற்படுத்துகிறது

பத்து ரூபா கொள்ளை அடித்தவன், அல்லது திருடியவன் கண்டு பிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படாவிட்டால் நாளடைவில் அவன் பெரும் கொள்ளைக்காரனாக அல்லது திருடனாக மாறிவிடுவான். தன்னைப் போல இன்னும் பலரை கொள்ளைக்காரர்களாகப் பயிற்றுவித்து விடுவான்.

சிறிய கொள்ளைகள், திருட்டுக்கள் தானே, என்ற போக்கில், சட்டத்தின் காவலர்கள் பாராமுகமாக இருந்துவிட்டால் நாளாக ஆக பெரும் கொள்ளைகளும் திருட்டுகளும் பல்கிப் பெருகி சமூக உடைமைகளுக்குப் பாதுகாப்பில்லை என்ற பயங்கர நிலையை உருவாக்கிவிடும்.

இதனை நன்குணர்ந்து காவல்துறையினர் வழிப்பறிக் கொள்ளைகளையும், திருட்டுகளையும் முளையிலேயே கிள்ளி எறிய நடவடிக்கை எடுத்து வருவது வரவேற்கத் தக்கதாகும்.

தொல்புரம் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட அறுவர் கைது செய்யப்பட்டது போல ஏனைய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவோரும் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டால், கொள்ளைத் தொல்லையை ஒழித்துவிடலாம்.

வழிப்பறிக் கொள்ளைகள், திருட்டுக்களை ஒழிப்பதில் மக்களுக்கும் பெரும் பங்குண்டு என்பதனை மறந்துவிடலாகாது சிறிய கொள்ளை, திருட்டாக இருப்பினும், அதனைப் பொருட்படுத்தி காவல் துறைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அதே போல, தங்கள் தங்கள் பகுதிகளில் நடக்கும் திருட்டு மற்றும் கொள்ளைகளில் ஈடுபடுவோரை அயலவர்கள் சேர்ந்து மடக்கிப் பிடிக்கவோ அது இயலாவிடின் இனங்காணவோ விழிப்புடன் செயற்பட வேண்டும்

வீடுகளில் இடம்பெறும் திருட்டுக்களைப் பொறுத்த வரையில், வீட்டுச் சொந்தக்காரர்கள் முன்னெச்சரிக்கையுடனும், அவதானத்துடனும் இருந்தால் அவற்றைத் தவிர்க்கலாம். பல வீடுகளில் வீட்டுச் சொந்தக்காரரின் கவலையீனத்தாலும் திருட்டுக்கு களம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

மொத்தத்தில் வழிப்பறிகள் கொள்ளைகள், திருட்டுக்கள் குறைவதற்கு காவல் துறையினரும் பொதுமக்களும் ஒருவருக்கு மற்றவர் உதவவேண்டிய தேவை உண்டு.

நகரப்புறங்களில் வீதிக்கு வீதியும், கிராமப் புறங்களில் குறிச்சிக்கு குறிச்சியும் விழிப்புக் குழுக்களை உருவாக்கி சமூக உடைமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த காவல்துறை நடவடிக்கை எடுக்கலாம்.

கொள்ளைகள், திருட்டுக்கள் மலிந்து போக இடம் கொடுத்தால், தடுப்பு நடவடிக்கைக்கு காலந் தாழ்த்தினால், அது சமூகத்தின் மூல வேரை அரித்தெடுக்கும் கறையானாகப் பரந்து புற்றெடுக்கும் பேராபத்து உண்டு. ஆகையால் உரிய வேளையில் உடனடியான செயற்பாடு தேவை என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

விடுதலைப் போராட்டம் நடக்கும் இவ் வேளையில் கொள்ளைகள், திருட்டுக்கள் போன்ற சமூக விரோதச் செயல்கள் மக்களின் அவலங்களை மேன் மேலும் பெருக்கும். எனவே இவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து செயற்படுத்துவது அவசியமாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வை பின் தள்ளும் தந்திரமே

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை!

தனது சொந்தத்தில் விஷயமில்லாதவன் அதனை மறைத்து, தன்வசமும் சரக்கு இருக்கிறது என்று காட்டிக் கொள்வதற்காக நேரத்துக்கு நேரம் ஒவ்வொன்றைக் கூறிக்கொண்டிருப்பான். ஆனால் எதுவுமே உருப்படியானதாக இருக்கமாட்டாது.

அது போலவே இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கமும் வெற்றுக் குடத்தைத் தட்டி வருகிறது!

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சொந்த யோசனை அல்லது திட்டம் ஒன்றைத் தான் வைத்திருப்பதாகவும், விடுதலைப் புலிகளிடம் அதனைச் சமர்ப்பித்துப் பேச இருந்ததாகவும் —

ஆனால் அதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையைக் குழப்பி போரைத் தொடங்கிவிட்டதாகவும் — உலகளாவிய ரீதியில் அரசு பிரசாரம் செய்து வருகிறது.

அதாவது சமாதானத் தீர்வு காண்பதை அரசாங்கம் புறக்கணித்து விடவில்லை என்று காட்டி உலக நாடுகளின் நன்மதிப்பைத் தேடி உள்ளது

ஆனால் தீர்வு யோசனைக்கான எழுத்துமூலமான ஆரம்ப நகல்கூட அதனிடம் இல்லை என்பது இப் போது வெளிப்படையான ஒன்றாகிவிட்டது. கொழும்பு பத்திரிகைகள் கூட இது விடயத்தில் அரசை அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்துக் காட்டி விட்டன.

புருடாக்கள்

தீர்வு யோசனை சம்பந்தமான அரசின் கையறுநிலை தெரிய வந்ததும், யுத்தத்தின் மூலம் சமாதானம் காண்பது என்ற நகைப்பிற்குரிய ஒரு நிலைப்பாட்டை அரசு வெளிப்படுத்தியது. தமிழருக்கு எதிராகப் பெரும் போர் ஒன்றை நடத்தி, புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு வருவதற்கு நிர்ப்பந்திப்பதே தனது நோக்கம் என்ற புருடா ஒன்றை அவிழ்த்து விட்டது!

போர் ஒன்றை உடனடியாகப் பெரிய அளவில் தொடங்குவதற்கான வாய்ப்பும் வசதிகளும், ஆற்றலும் குறைந்துள்ளதை உணர்ந்து புரிந்து —

அதனை ஆரம்பிப்பதற்கான காலம் கனியும் வரையும் ஏதோ ஒன்றைச் சொல்ல வேண்டும் என்பதற்காக, வடக்கு–கிழக்கு நிர்வாகத்துக்கென, இடைக்கால நிர்வாக சபை அமைப்பது பற்றி அரசு பிரசாரம் செய்து வருகிறது.

போரினூடாகச் சமாதானத்தைக் காணப் போவதாகக் கூறிய அரசு, திடீரென இடைக்கால நிர்வாக சபை மூலம் சமாதானத்தைக் காணலாம் என்று கருதுகிறது; கூறுகிறது! அப்பாடா, இடிமின்னல் முனை சந்திரிகாவுக்கு! தந்தையையும் தாயையும் வென்ற பலே கெட்டிக்காரி!

அரசியல்

ஏமாறுபவர்கள் இருக்கும் வரைக்கும் ஏமாற்றுவோரும் இருக்கவே செய்வர். தங்கள் அரசியல் வாழ்வை, அதிகாரத்தை, செல்வாக்கை நிலை நாட்ட விரும்பும் கொழும்புத் தமிழ்க் கட்சிகள் இருக்கும் வரைக்கும், அவர்களுக்கு ஒரு சில அரசியல் பதவிகளைக் கொடுத்து தனது ஏமாற்று வேலையை எவ்வித சிரமமும் இன்றி நிறைவேற்றலாம் என்று சந்திரிகா மனதில் உதித்த எண்ணமே இடைக்கால நிர்வாக சபை என்ற விவகாரமாக வடிவெடுத்து நிற்கிறது.

முந்திய ஸ்ரீ.ல.சு.க. ஆட்சிக்கால அரசியல் அதிகாரிகள் முறை வருகிறது

ஆசை ஊட்டுகிறார்

இடைக்கால நிர்வாக சபை பற்றி ஆராய்வதற்காக தமிழ்க் கட்சிகளை அழைத்த சந்திரிகா, அது எந்த அடிப்படையில் அமையும் என்ற சிறு குறிப்புத் துண்டைத் தானும் கையில் கொண்டு செல்லவில்லை! கூட்டத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் பதவிப் பித்தர்கள். எனவே ஏதோ ஒரு கதையைச் சொல்லி ஆசை ஊட்டிவிட்டால் போதும் என்று நினைத்திருக்கிறார். தமிழ் அரசியல் வாதிகள் எனக் கூறப்படுவோரின் உளவியலை நன்றாக படித்தறிந்திருக்கிறார்!

இடைக்கால நிர்வாக சபையின் நோக்கம், அமைப்பு முறை குறித்துப் பின்னர் ஆராயப்படும் என்று கூறிக் கூட்டத்தை முடித்துவிட்டார். இடைக்கால சபை சம்பந்தமான விவரங்களை இனி மேல் தான் தயாரிக்க வேண்டும் என்பதனை அமைச்சர் ஜி. எஸ். பீரிஸ் வெளிப்படுத்தி உள்ளார்; ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கான அரசின் யோசனை இனிமேல் தான் தயாரிக்கப்படவிருப்பது போல —

இடைக்கால சபையின் அமைப்பு விதிகளும் இனிமேல் தான் தயாரிக்கப்பட வேண்டும்!

வடக்கு - கிழக்கு மாகாண சபை கடந்த ஐந்து வருடங்களாக இயங்கவில்லை. அந்த வெற்றிடத்தை ஈடு செய்வதற்கு இடைக்கால சபை உதவும் என்று அதில் பதவி பெற விழுந்தடிக்கும் முன்னாள் போராளி- இந் நாள் தமிழ்க் கட்சி உறுப்பினர் ஒருவர் தமது வாய்ப்புக் கருதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மாகாணசபை முறை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் பத்துச் சதவீதத்தையேனும் நிறைவேற்றும் வலுவற்ற வெறும் பம்மாத்துச் சபை என்று தமிழர்களால் பரவலாக நிராகரிக்கப்பட்ட ஒன்று. அதிகாரங்கள் கொழும்பு அரசிடமே நாணயக்கயிறு போல அதிகாரங்கள் குவிந்திருக்க அதன் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப ஒடும்மாடாகவே மாகாணசபை விளங்குகிறது.

அதனை மீண்டும் இயங்க வைப்பதானாலும் கூட, தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதனை இப்போது நினைத்தும் பார்க்க முடியாது. போரின் மத்தியில் தேர்தல் என்பது சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் விழுவது போலாகும்.

அரசியல் அதிகாரிகள்

எனவே இடைக்கால நிர்வாக சபை என்பது இப்போது அதிகாரிகள் செய்யும் நிர்வாக வேலைகளை அரசியல் வாதிகள் செய்வது என்பதாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முந்திய ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட அரசியல் அதிகாரிகள் (Political Authoritie) போன்றதாகவே இருக்கும். அதாவது சிவில் நிர்வாகத்தில் அரசியல்வாதிகள் பங்கேற்பது என்பதாகும்; உண்மையில் தலையிடுவதாகும்!

இதனையே வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிர்வகிப்பதற்கான ஒரு முறைசாரா அமைப்பாக இடைக்கால சபை விளங்கும் என்று அமைச்சர் பீரிஸ் மேலோட்டமாக, தென்தெட்டாக, பட்டும் படாமலும் வர்ணித்திருக்கிறார்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தை நடத்துவதற்கு இடைக்கால சபை என்று சொல்வதைவிட, கிழக்கில் அரசியல் வாதிகள் ஊடாக நிர்வாக வேலைகளைச் செய்யும் சபை என்று சொல்வதே பொருத்தம்.

ஏனெனில், வடக்கில் அரசாங்க அதிகாரிகள் பெயருக்கு இருந்தாலும் அரசியல் அதிகாரம் விடுதலைப் புலிகளிடமே உள்ளது. விடுதலைப் புலிகள், அரசாங்க நிர்வாக அலகுகளுக்கு சமாந்தரமான அமைப்புகளை நிறுவி செயற்படுவது போன்று வெளித்தோற்றத்துக்குத் தெரிந்தாலும் —

அரசியல் அதிகாரமும், நிர்வாக அதிகாரமும் விடுதலைப் புலிகள் வசமே உள்ளன.

இந்த நிலையில், இடைக்கால சபை வடக்கின் — வட தமிழீழத்தின் (தீவுப்பகுதி, வவுனியாவில் ஒருபகுதி தவிர்ந்த ஏனைய) எல்லையை எட்டியும் பார்க்க முடியாது!

கிழக்கிலேயே இயங்க முடியும்

கிழக்கில் மட்டுமே அது இயங்க முடியும். அங்குள்ள மக்களின் ஆதரவைப் பெற்றுத் தமது அரசியல் வாழ்வை நிலைநிறுத்தும் நோக்குடனேயே ஈ. பி. டி. பியும், புளொட்டும் இடைக்கால சபைக்கு விழுந்தடிக்கின்றன. அது என்ன கோலத்தில் இருந்தாலும் பரவாயில்லை, அதனை உருவாக்கி எங்களுக்கு பதவிகளைத் தாருங்கள் என்று சந்திரிகா அம்மையாரின் சேலைத் தலைப்பில் தொங்குகிறார்கள்!

இத்தகைய பதவிகளைக் கொடுப்பதன் மூலம் தனது நாடாளுமன்ற பலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதும் சந்திரிகாவின் மற்றொரு நோக்கம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு யோசனை கேட்கும் தமிழ்க் கட்சிகளை வாய்மூட வைக்கும் தந்திரமும் ஆகும். ஈ. பி. டி. பியையும், புளொட்டையும் தம்வசம் சேர்த்தால் 13 ஆசனங்கள் தேறுமல்லவா?

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்த வரையில், இப்போது இடைக்கால சபையில் சேர்வதற்கு பின்னடிப்பது போலக் காட்டிக் கொள்கிறது. ஈ. பி. டி. பியும், புளொட்டும் அரசியல் அதிகாரிகளாகி விட்டால் அவர்களுக்கு கிழக்கில் மக்கள் ஆதரவும், செல்வாக்கும் கிடைத்துவிடும் என்ற அச்சத்தில் கடைசி நேரத்தில் அதில் சேர்ந்து கொள்வதற்கான சகல வாய்ப்புகளும் உண்டு.

கிழக்கில் இப்போது சுமுகமாக நடக்கும் அரச நிர்வாகத்தை இடைக்கால சபையும், அரசியல் அதிகாரிகளும் சீர் குலைத்து விடுவார்கள் என்ற அச்சம் இப்போதே அங்கு பணிபுரியும் நிர்வாக அதிகாரிகள் மத்தியில் பரவத் தொடங்கிவிட்டதாம். சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த நிலைதான் நிச்சயமாக ஏற்படும் என்று அரச நிர்வாக உயர் அதிகாரி தெரிவித்தார்.

கைப்பொம்மை சபை

மேலும் இடைக்கால சபை ஒன்று உருவாகும் பட்சத்தில் —

வட தமிழீழத்தில் புலிகளின் தனித்துவமான ஆட்சி; தென்தமிழீழத்தில் சிங்கள அரசின் சார்பில் அதன் கைப்பொம்மைகளாக தமிழ்க் கட்சிகளின் ஆட்சி என்ற நிலையே வரும்.

அப்போதுகிழக்கின் இடைக்கால சபையின் உதவியுடன் விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கானவாய்ப்பு ஏற்படும் என்று சந்திரிகா நினைத்திருக்கலாம் ஆனால் அது அவ்வளவு இலகுவல்ல.

தமது கையாட்களான அதிகாரிகள் சிலரை வடதமிழீழத்திற்கு இடமாற்றம் செய்து உளவாளிகளாகப் பயன்படுத்தும் சாத்திய நிலை உண்டு அது போல தென் தமிழீழத் தமிழ் இளைஞர்களை இராணுவத்துக்கு துணையாக, தொண்டர் படையாகத் திரட்டி உதவுவதற்கும் இடைக்கால சபை அரசியல் அதிகாரிகள் பயன் படுத்தப் படுவார்கள்!

இவர்களை இடைக்கால சபை அரசியல் அதிகாரிகளாகவே வைத்துக் கொண்டு கிழக்கில் சிங்களக் குடியேற்றத்தைத் தீவிரப்படுத்தவும் அரசு திட்டமிட்டிருக்கலாம்.

மொத்தத்தில் இடைக்கால சபை அரசியல் அதிகாரிகளின்— தமிழ் எட்டப்பர்களின் - அனுசரணையுடனேயே போர் என்ற போர்வையில்— விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்று கூறி தென் தமிழீழத் தமிழர்களை படுகொலை செய்து அவர்களது நிலபுலங்களைக் கபளீகரம் செய்ய அரசு திட்டமிடுகிறது.

தமிழர்கள் மத்தியில் காட்டிக் கொடுக்க புல்லுருவிகள் இருக்கும் வரை அவர்களின் விடுதலைப் போராட்டம் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். சிங்கள அரசான எதிரியை எதிர் கொள்வதற்கு மேலதிகமாக, இத்தகையவர்களின் தொல்லையையும் களைய வேண்டிய தேவை ஒரு சுமையாக மாறுகிறது.

விடுதலைப் போராட்டங்களுக்கு இத்தகைய சங்கடங்கள் ஒன்றும் புதிதல்ல. இடைக்கால நிர்வாக சபையும் அத்தகைய சங்கடங்களில் ஒன்றாக மாறும்என்பது நிச்சயம்.

★

- உதயகாந்தன் -

பணச் சடங்கில் பெற்ற 44 ஆயிரம் ரூபா திருட்டு

வடமராட்சி, ஜூன் 25

பணச்சடங்குக் கொண்டாட்டத்தில் கிடைத்த 44 ஆயிரத்து 300 ரூபா பணம், கொண்டாட்டம் நடந்த அதே நாளில் நள்ளிரவு வேளையில் திருடப்பட்டது.

இச்சம்பவம் புலோலி தெற்கு கருகம்பன் என்னும் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

இக்கிராமத்தைச் சேர்ந்த சந்தன் நட [illegible] என்பவரின் வீட்டில் கடந்த 22 ஆம் திகதி பணசடங்கு கொண்டாட்டம் நடைபெற்றது. அன்றைய தினம் இரவு 11-30 மணியளவில் கொண்டாட்டம் முடிவடைந்ததும் வசூலான பணம் கொண்ட பெட்டியை அறை ஒன்றில் அலுமாரியில் வைத்துப் பூட்டி விட்டு கொண்டாட்டக்காரர் உறவினர்களுடன் பந்தலில் நித்திரை கொண்டனர்.

அதிகாலையில் கொண்டாட்டக்காரர் வீட்டிக்குப் பின்புறம்சென்ற போது ஜன்னல் கம்பிகள் உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டார். உடைந்த ஜன்னலூடாக வீட்டுக்குள் எட்டிப் பார்த்தபோது பூட்டியிருந்த அலுமாரி திறக்கப்பட்டுப் பணப் பெட்டி காணாமல் போயிருந்தது.

பின்னர் வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்ட மொன்றில் பணப்பெட்டி கத்தியால் கொத்திக்கிழித்த நிலையில் மீட்கப்பட்டது.

அப்பெட்டியில் பணசடங்குக் கொப்பியும் 36 ரூபா சில்லறைக்காசு மட்டுமே இருந்தன.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை காவல் துறையில் புகார் செய்யப்பட்டதை அடுத்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். [அ-155 173]

கிழக்கிலே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துவம் வாய்ந்த 'தென்கிழக்கு பல்கலைக் கழகமாக' மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகக் கல்லூரிக்கான இடவசதியை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான நிலைமைகளை நேரில் ஆராய உயர்மட்ட அமைச்சரவைக் குழு ஒன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகள் சகிதம் அட்டாளைச்சேனைப் பகுதிக்கு இவ்வாரம் விஜயம் செய்யவிருக்கிறது.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாகத் தெரிவான மாணவர்கள் புதிதாக அட்டாளைச்சேனையில் அமையவிருக்கும் பல்கலைக்கழகக் கல்லூரியில் தங்களைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் பல்வேறு காரணங்களினால் நிமிர்த்தம் கல்வியைத் தொடர முடியாமல் — அங்கு செல்லாமல் — இருக்கும் மாணவர்களும் இக் கல்லூரியில் கல்வியைத் தொடருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார். (உ)

போர் நெருக்கீடு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 25

மல்லாகம் பிரதேசத்தில் உள்ள சமூக சேவையாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கு, ''போர்க்கால நெருக்கீடுகளும், அவற்றுக்கு முகம் கொடுத்தலும்'' என்பது பற்றிய கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு [illegible] கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-14)

விடுதி மாணவிகள் தீக்காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

குப்பி விளக்கு தட்டுண்டு தீப்பற்றியதால் மாணவிகள் காயமடைந்தனர்.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் உள்ள மாணவிகள் விடுதி ஒன்றில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கிளிநொச்சி செல்வா நகரைச் சேர்ந்த இராமலிங்கம் இராசேஸ்வரி (வயது 24) கணேசு கவிதா (வயது 16) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்,

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (இ-15-13)

சிறுகதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

செங்கை ஆழியானின் இரவுநேரப் பயணிகள் சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும். (ஐ-14-51)

விவசாய கல்லூரி போட்டிப் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 25

ஜூலை மாதம் முதலாம் திகதி நடைபெற இருந்த விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெறும் [illegible] திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-4)

ஆலய உற்சவங்கள்

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மகா சங்காபிஷேகமும் உற்சவமும் நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

காலை 9 மணிக்கு நவோத்திர சங்காபிஷேகமும் மாலை 5 மணிக்கு கோபிகாஸ்திரி வஸ்திராபரண அனுக்கிரகக் காட்சியும் இடம் பெறும். (ஐ-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 25

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் சிவனுக்குரிய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இன்று காலை 9.15 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று 10 மணிக்கு கொடியேற்றப்படும்.

அடுத்த மாதம் மூன்றாம் திகதி தேர்த் திருவிழாவும் அடுத்த நாள் ஆனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ முத்தவிநாயகர் கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். [ஐ-14-111]

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும் மறுநாள் திருக்கல்யாண உற்சவமும்இடம்பெறும்.(ஐ-14-152)

★ ★ ★

கச்சாய் புனித பேதுரு [illegible]வர் ஆலய திருவிழா ஆயத்த வழிபாடுகள் கடந்த 20 ஆம் திகதி முதல் நடைபெற்றுவருகின்றன. எதிர் வரும் புதன்கிழமை மாலை 5 – 30 மணிக்கு திவ்விய நற்கருணை விழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்குதிருவிழா திருப்பலியும் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் புனிதரின் ஆசீரும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த நவோத்தர சகஸ்ர மகா சங்காபிஷேகமும் விசேட நவசக்தி அர்ச்சனையும் நாளை திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விக்னேஸ்வர, சங்கு பூசைகளுடன் கிரியைகள் ஆரம்பமாகும். மறுநாள் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா நடைபெறும்.

★ ★ ★

அராலி மேலாம் சாட்டி குண்ணியமூர்த்தி கந்தஞானியார் ஆலய ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். [அ-161)

★ ★ ★

வட்டுக்கோட்டை தெல்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கனகலிங்கேஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா ஜூலை 3 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா ஜூலை 4 ஆம் திகதியும் நடைபெறும். (அ-161)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில் —

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் —

மாலை 5 மணிக்கு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (இ-4)

★ ★ ★

''டொனால்ட் கணேஷ் குமார்'' ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று காலை 9 மணி முதல்நடைபெறும் ஆட்டத்தில் ஸ்ராலின் அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் அணி மோதும்.

★ ★ ★

யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4.00 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென் மேரிஸ் சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதும்.

ஆஸ்பத்திரி நோயாளருக்கு நேற்றுப் பாய்கள் வந்தன

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் (மந்திகை) நிலவிய குறை ஒன்று நீங்கியுள்ளது.

நோயாளிகளின் படுக்கைத் தேவைக்கான பாய்கள் நேற்று 24 ஆம் திகதி சனிக்கிழமை வந்து சேர்ந்தன. அவை உடனடியாகத் தரையில் படுத்த நோயாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

கடந்த 20 ஆம் திகதி ''பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நோயாளி வெறும் தரையில் படுக்கும் அவல நிலை'' என்ற தலைப்பில் 'உதயனில்' செய்தி வெளியாகியது குறிப்பிடத்தக்கது. (அ-155)

முக்கிய அறிவித்தல்

திருநெல்வேலி செல்லத்துரை மனோன்மணி ஆகிய நான் கடந்த 23-06-95 இல் ஓமந்தையிலிருந்து கிளாலியூடாக இங்கு வரும் வேளை, என்னுடன் பயணம் செய்த நெல்லியடியைச் சேர்ந்த ஒரு பெண்மணியிடம் எனது வடபகுதிக்கு உள்ளே வருவதற்கான அனுமதிச் சீட்டு தவறுதலாகக் கைமாறி விட்டது. அவரது பெயரோ, முகவரியோ எனக்குத் தெரியவில்லை. மேற்படி அனுமதிச்சீட்டு மிக அவசரமாக (திங்கட்கிழமைக்கு முன்பாக) தேவைப்படுவதால் குறித்த பெண்மணி அனுமதிச்சீட்டை No 802, பலாலி வீதி, திருநெல்வேலி(அண்ணா கோப்பி கடைக்கு அருகில்) என்ற முகவரியில் சேரக் கூடியதாக அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நன்றி (37232)

யாழ்ப்பாணம்

மாவட்டக் கூட்டுறவுச் சபை
பதவி வெற்றிடங்கள்

1. சுருக்கெழுத்தாளர் / தட்டெழுத்தாளர் பதவி 304/10

சம்பள அளவுத்திட்டம்:

1305 — 2005

40X5 — 50X10

(இத்துடன் கூட்டுறவு சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டபடி 1565/- வழங்கப்படும்.)

கல்வித்தகைமை:

அ) தமிழ் / ஆங்கில சுருக்கெழுத்தாளர் / தட்டெழுத்தாளர் பதவியில் கூட்டுறவுப்பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் 3 வருடங்களிற்கு குறையாத அனுபவம் அல்லது இப்பதவியில் கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டத்தில் 6 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் தமிழ் / ஆங்கில மொழியில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களிலான சித்தியுடன் தொழில் நுட்ப கல்லூரியின் சுருக்கெழுத்தாளர் சான்றிதழ் (கீழ்தரம்) சான்றிதழுடன் பின்வரும் அனுபவமும் வேகமும்,

மொழி	அனுபவவருடம்	சுருக்கெழுத்து	தட்டெழுத்து
தமிழ்	8	80	40
ஆங்கிலம்	4	100	50

2 அச்சக முகாமையாளர்

சம்பள அளவுத்திட்டம்;

இல: 10

1305 — 2005

40X5 — 50X10

(இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டபடி 1565/-ம் வழங்கப்படும்.)

தகைமைகள்

அ. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 3வருடங்களுக்கு குறையாத களஞ்சியப் பொறுப்பாளர்/சில்லறைப்பண்டக சாலை மேற்பார்வையாளர்/சில்லறை பண்டக சாலை முகாமையாளர் பதவியில் அனுபவம் அல்லது இதே சம்பந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் 12ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் 6வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர உயர்தர பயிற்சியில் சித்தி/க. பொ. த.உயர்தர மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய 4வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அத்துடன் அச்சகத்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. விற்பனை நிலைய முகாமையாளர் (தற்காலிகம்) 208/15

சம்பள அளவுத்திட்டம்:

1030 — 1355

20X10 — 25X5

(இத்துடன் கூ. சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படி ரூபா 1483/- வழங்கப்படும்)

தகைமை

அ. கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதர) பத்திரம்/ க.பொ.த. (சாதாரணதரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், தமிழ் மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி. சம்பந்தப்பட்ட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொது

வயதெல்லை

25 தொடக்கம் 45 வரை.

கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்ப படிவங்களை சபையில் ரூபா 10/- செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி- 03-07-95

மாவட்டச் செயலாளர்,
யா. மா. கூ. சபை.

[சி-1555]

யாழ்.
றோட்டறிக்
கழகத்தின்
54 ஆவது

ஆண்டு நிறைவு விழா

இடம்:- யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம்:- 1995 ஜூன் 25 [ஞாயிற்றுக்கிழமை] பி. ப. 3 30 மணி

தலைவர்:

Rtn. PHF. ஈ. சரவணபவன் அவர்கள்

(தலைவர், யாழ் றோட்டறிக் கழகம்)

பிரதம விருந்தினர்:

பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள்

(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்:

திரு. வே. இளங்குமரன் அவர்கள்

(பொறுப்பாளர், தமிழீழக் கல்விக் கழகம்)

★ "சக்கரம்" மலர் வெளியீடு
Rtn. PP. Dr. S. இராசசூரியர்

★ முதற்பிரதி வழங்கல்

★ முச்சக்கர வண்டிகள், மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்.

★ றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள்.

✶ பரிசில் வழங்கல்:-

றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கானது.

எமது கழகத்தின் 54 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தலைவர், உறுப்பினர்கள்
யாழ் றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

விழாவுக்கான ஆதரவும் உதவியும்:

கலக்சி புகைப்பட சேவை
யாழ்ப்பாணம் (சி/1559)

யாழ். றோட்டறிக் கழகம்

பின்வரும் பாடசாலைகளில் உள்ள இன்ரறக்ட் கழகங்களுக்கான சான்றிதழ்கள் (Certificate of Organization) இன்று யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள யாழ் றோட்டறிக் கழகத்தின் 54 ஆவது ஆண்டு விழாவில் வழங்கப்படும்.

உரிய இன்ரறக்ட் கழகத் தலைவர்கள் சமுகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

- ★ யாழ். இந்துக் கல்லூரி
- ★ மானிப்பாய் மெமோரியல் கல்லூரி
- ★ ஹாட்லிக் கல்லூரி
- ★ வட. இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை
- ★ யூனியன் கல்லூரி தெல்லிப்பளை

தலைவர்
யாழ். றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [சி/1558]

மொழிபெயர்ப்பாளர் தேவை

ஆங்கிலமொழி மூலமான அறிவியல் (விஞ்ஞான) புத்தகங்களை தமிழில் மொழி பெயர்ப்பதில் முழு நேரமாக அல்லது பகுதி நேரமாக பணிபுரிய மொழி பெயர்ப்பாளர்கள் தேவையாகவுள்ளது. கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு,

மாணவர் அறிவியல் கழகம்
காங்கேசன்துறைச் சாலை,
கோண்டாவில்.

(37216)

சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஜூன் 25

ஏறாவூருக்கு அருகே உள்ள தளவாய் கிராமத்தில் "ரெலோ" உறுப்பினரான தெட்சணாமூர்த்தி சேகர் என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை —

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று கூறி தளவாய்ப் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர். [ஐ]

தூதரகங்களுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டுத் தூதரகங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஒரு வாரகாலத்தில் தொடராக இடம்பெற்ற மூன்று குண்டுவெடிப்புகளும் ஒரே மாதிரியானவை என அரசாங்கப் பகுப்பாய்வாளர்கள் திணைக்களம் உறுதி செய்திருப்பதாகவும் —

இக் குண்டு வெடிப்புகளுக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்றும் அவர் மேலும் அறிவித்தார். [உ]

புலிகள் தாக்குதல்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உருவாக்கி விட்டால் இராணுவ பலத்தில் ஓரளவு மேலோங்கி விடலாம் என்று படைத்தரப்பு கணக்குப் போடக்கூடும்.

வவுனியாவில் உள்ள படையினர் தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகிவருவதாகவேதெரிகிறது.

பலாலியில் கடல் வழியாகப் படையினர் சென்று இறங்கியுள்ளனர்.

வவுனியாவில் இருந்து தாக்குதலை படையினர் ஆரம்பித்தால் அதனைத் தடுக்க புலிகள் தமது முழுப் பலத்தையும் அங்கு கொண்டு சென்று நிறுத்துவர். அச்சமயம் பலாலியில் இருந்து படைகள் முன்னே நகரும்.

பல முனைகளில் இருந்து படைகள் நகரும் போது விடுதலைப் புலிகளது அணிகள் பரவலாக வேண்டி வரும்.

அணிகள் பரவலானால் பலம் குறையும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி படையினர் முன்னேறலாம் என்பது படைத்தரப்பின்திட்டமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

—இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாரிய தாக்குதல்களின்போது இவ்விமானங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அந்த அதிகாரி தெரிவித்ததாக "திவயின" மேலும் தெரிவிக்கிறது

(இ-10)

தாக்குதல் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏவுகணைக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதுமான இவ்வகை ஹெலிகள் இல்லாத காரணத்தால் இதுவரை காலமும் பாதுகாப்புப் படையினரின் முகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட போது மீட்புப் படையணிகளை அனுப்புவதில் பல்வேறு இன்னல்களை பாதுகாப்புப் படையினர் எதிர் நோக்க வேண்டியிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

(இ-10)

"உதயன்"
கிண்ணத்துக்காக
பருத்தித்துறை
ஐக்கிய விளையாட்டுக்
கழகம்
நடத்தும்

ஏழு பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான
உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி -- 1995

அரையிறுதி ஆட்டங்கள் இன்று

மைதானம்: பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானம்

நேரம்: பிற்பகல் 3-45 மணி முதல்

✶ அளவெட்டி இளைஞர் அணி எதிர் யங் றோயல் அணி

✶ யங் ஹென்றீஸ் அணி எதிர் ஞான முருகன் அணி

அனைவரும் வருக!

எஸ். ரி. கல்வி நிறுவனம்

46 (105), 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

ஆண்டு 8 முதல் O/L வரை
மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: **01-07-1995**

தமிழ்	—	திருஞானம், எழில்
சமூகக்கல்வி	—	இக்னேசியஸ், றெஜி
விஞ்ஞானம்	—	சிவானந்தராஜா, மக்ஸ்சி
கணிதம்	—	எஸ் ரி. செல்வக்குமாரன், ஜெயக்காந்தன், டானியல்ரோ
வர்த்தகம்	—	பிரபல ஆசிரியர் கி செல்வக்குமாரன்
ஆங்கிலம்	—	பற்றிக் பால்றாஜ் டானியல்ஜோ
சிங்களம்	—	பியதாச

அனுமதிகளை 31-06-1995 இற்கு முன்பு பெற்றுக்கொள்ளவும்.

[37228]

மரண அறிவித்தல்கள்

திருமதி
ஆச்சிமுத்து தம்பியையா

காரைநகர் - கோவளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது 10/7, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமான திருமதி ஆச்சிமுத்து தம்பியையா நேற்றிரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் தம்பியையாவின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி [பேபி], திரிபுரசுந்தரி [பபா - பரந்தன்], இராஜராஜேஸ்வரி, காலஞ்சென்ற கனகசுந்தரம், மற்றும், விஜயலக்சுமி, சிவசோதி [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மற்றும் கணபதிப்பிள்ளை [பரந்தன்], திருநாவுக்கரசு [ஓய்வுபெற்ற உள்ளூராட்சி தொழில் நுட்ப உத்தியோகத்தர்], அன்னபாக்கியம் [கொழும்பு], கந்தசாமி [காந்தன் களஞ்சியம் — யாழ்ப்பாணம்], தேவகி [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, மற்றும் காமாட்சி [பரந்தன்], பொன்னம்மா [காரைநகர்], பரமசிவம் [பரந்தன்], தையல்நாயகி, பாலாமணி [வவுனியா], சிவசுப்பிரமணியம் [கொழும்பு] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு தெய்வேந்திரம்

[37238]

பரநிருபசிங்கம் தவயோகராசா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனை இராமநாதன் தொடர்மாடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பரநிருபசிங்கம் தவயோகராசா 21-6-95 இல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரநிருபசிங்கம் மற்றும் இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், கீட்டாவின் அருமைக் கணவரும், ரசிகா, ரம்மியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, இராசகோபால் (சுவிஸ்), சந்திரேஸ்வரி, உலகநாதன் [சுவிஸ்], அமிர்தலிங்கம் (சுவிஸ்), மாணிக்கராசா (நோர்வே), மோகனேஸ்வரி, கனகலிங்கம் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும், குணரத்தினம், குமாரகுலசிங்கம், நாகேஸ்வரி, இராசரத்தினம், யோகம்மா, கெங்காதேவி, பத்மநாதன், முருகானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 24-06-95 இல் கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி யோகேஸ்வரி குமாரகுலசிங்கம்
(சகோதரி)

9, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (37235)

N. K. நல்லதம்பி

இருபாலையைச்சேர்ந்த N. K. நல்லதம்பி இளைப்பாறிய Store Keeper நேற்று [24-6-95] காலமானார். இவர் அரியமலரின் அன்புக் கணவரும், அம்பிகைமலர், திலகவதி, புனிதவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுப்பிரமணியம் J. P. [Colombo], சுந்தரலிங்கம் [Canada] ஆகியோரின் மாமனும், க. விசுவலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
க. விசுவலிங்கம்
[சகோதரன்]

"தங்கவிலா"
கோப்பாய். (37237)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது